# 7

# நித்திய ஜீவனுக்கான உறுதி

*ஏதோ ஒன்று உங்களுக்கு தெரியவில்லை என்பதற்காக, நீங்கள் எப்போதாவது நம்பிக்கை இழந்து போயிருக்கிறீர்களா? ஒருவர் வியாதியாயிருப்பதின் மோசமான பகுதி என்னவென்றால், ஒரு மருத்துவர் என்ன வியாதி என்று கண்டுபிடித்து கூறும்வரை சம்மந்தப்பட்டவர் அதை அறியாமல் இருப்பதுதான். நீங்கள் எங்கே செல்ல வேண்டும் என்பதை அறிந்திருந்தும், அந்த இடத்தை எப்படி சென்றடைவது என்று தெரியாமல், சாலையில் தடுமாறி நின்ற சூழ்நிலையில் நீங்கள் எப்போதாவது இருந்திருக்கிறீர்களா? நீங்கள் பள்ளியில் தேர்வு எழுதும் போது, வினாக்களுக்கான பதில் தெரியாமல் இருக்கும் போது அது உங்களுக்கு தர்மசங்கடமாக இருக்காதா?*

*இவ்விதமாகவே, ஒருவர் ஆவிக்குரிய காரியங்களில் எது சரியானது என்பதை நிச்சயமாக அறியாத நிலையில், அவரும் சங்கடப்படக்கூடியவராக இருப்பார். யோவான் தங்களுக்கு போதிக்கப்பட்ட காரியங்கள் உண்மையிலேயே சரியானவைகள்தானா என்பதை நிச்சயமாக அறியாமல், சந்தேகத்தோடு இருந்த கிறிஸ்தவர்களுக்கு 1 யோவான் நிருபத்தை எழுதினார், "நீங்கள் அறியமுடியும்! இயேசு கிறிஸ்துவானவர் தேவனுடைய குமாரன் என்பதை நீங்கள் அறிய முடியும்! பாவத்தின் மேல் உங்களுக்கு வெற்றி உண்டென்பதை நீங்கள் அறிய முடியும்!" என்பதே அவருடைய செய்தியாக இருந்தது.*

*இந்த "நிச்சயமான காரியங்களின் சங்கமம்" அதின் உச்சகட்டத்தை எட்டுகிற நிலையில், நாம் இந்த நிருபத்தின் கடைசி அதிகாரத்தை வாசிக்கிறோம். "உங்களுக்கு __நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும்,__ தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" (1 யோவான் 5:13; வலியுறுத்துதல் என்னுடையது).[1] "நித்திய ஜீவனுக்கான உறுதி" நிச்சயமானதாயிருந்தது! யோவானுடைய வாசகர்ளுக்கு அந்த செய்தி தேவையாயிருந்தது மற்றும் அது நமக்கு தேவையாயிருக்கிறது.*

## *பிரச்சனை*

### *அப்போதிருந்த பிரச்சனை*

*யோவானுடைய வாசகர்களுக்கு பரலோகத்தில் பலன் இருக்கிறது என்பதற்கான உறுதி தேவைப்பட்டது. ஏனெனில், பிற்காலத்தில் அறிவுவாதிகள் நம்பின கொள்கைகளை நம்பின கள்ளப் போதகர்களால் அவர்கள் தொல்லைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இந்த பிரிவினைவாதிகள் தாங்கள் "எல்லாம் தெரிந்தவர்கள்," மற்றும் சிறப்பு அறிவு பெற்றிருந்தகிறிஸ்தவர்கள் என்று உரிமை கோரினார்கள். இன்று நாம் அவர்களை "முற்றும் தெரிந்தவர்கள்" என்று நாம்*

அழைக்கலாம். அவர்களைப் பொருத்தவரை, அவர்களின் சிறப்பு அறிவு என்பது இயேசு கிறிஸ்து உண்மையில் மாம்சத்தில் வந்திருக்கவில்லை மற்றும் ஒருவர் பாவத்தில் தொடர்ந்து வாழ்வது, தேவனோடு அவருக்குள்ள உறவை பாதிக்காது என்ற செய்தியை உள்ளடக்கியிருந்தது.

இவர்களுடைய உயர்வான மனோபாவம் மற்றும் சிறப்பு அறிவை பெற்றிருந்தது போன்ற பாசாங்கு, யோவான் இந்த நிருபத்தை யாருக்கு எழுதினாரோ அந்த கிறிஸ்தவர்களை தாழ்வானவர்களாக உணரும்படி செய்தது. அவர்கள், "தங்களுக்கு போதிக்கப்பட்டிருந்தது உண்மையான சத்தியம்தானா?"; "எது சரியானது என்பதை நாம் எப்படி அறியக்கூடும்?" என வினா எழுப்பக்கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் தங்களுக்கு போதித்தவர்கள் தேவனிடத்திலிருந்து வந்தவர்கள்தானா மற்றும் அவர்கள் இயேசுவைப்பற்றி போதித்த சத்தியம் உண்மையானது தானா என்பதை எப்படி தீர்மானிப்பது என்பதை அறிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருந்தனர். தாங்கள் பரலோகத்திற்கு செல்லமுடியும் என்ற உறுதியை வாஞ்சிக்கிறவர்களாக இருந்தார்கள், இந்த அக்கரையுள்ள விஷயங்களுக்கு பதிலளிக்கும்படிதான் யோவான் எழுதினார்.

**தற்போதிருக்கிற பிரச்சனை**

கள்ளப்போதகர்கள் தங்கள் விசுவாசத்தை சந்தேகப்படும்படி செய்ததால், அப்போதைய கிறிஸ்தவர்கள் ஒரு பிரச்சனையை உடையவர்களாயிருந்தது போல, இன்றைய கிறிஸ்தவர்களுக்கும் இப்படிப்பட்ட பிரச்சனைகள் இருக்கக்கூடும், அறிவியல் மற்றும் ஆய்வறிவை வணங்குகிற ஒரு அவிசுவாச உலகத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். சில நேரங்களில் அறிவாளிகள் மற்றும் படித்தவர்கள், நாம் தேவனையும் இயேசுவையும் விசுவாசிக்க வேண்டியதில்லை என கூறுவது போல இருக்கிறது, இருப்பினும் அப்படிப்பட்டவர்கள் அறிவாளிகள் மற்றும் நவீன மனிதர்கள் என கருதப்படுகிறார்கள். ஆகவே, "நாம் விசுவாசித்ததை குறித்து எப்படி நிச்சயமுள்ளவர்களாக இருக்கக்கூடும்?" என வினவக்கூடும்.

மேலும், நம்மில் பெரும்பாலானோருக்கு ஏற்படக்கூடிய கேள்வி, "நித்திய ஜீவனை குறித்து நாம் எப்படி நிச்சயமுள்ளவர்களாக இருக்க முடியும்?" என்பதாயிருக்கிறது. ஒரு கிறிஸ்தவர் கிருபையிலிருந்து விழுந்து, நித்தியத்திற்கு இழந்து போனவராக இருப்பது சாத்தியமானது என நாம் சரியாகவே பிரசங்கித்துள்ளோம்.[2] நம்முடைய அங்கத்தினர்கள் தங்களுடைய நித்திய இரட்சிப்பை குறித்து அசவுகரியப்படும்படியாக, நாம் இந்த செய்தியை ஒரு வேளை வலியுறுத்தி பிரசங்கித்திருக்கிறோம். யோவான், "நீங்கள் நித்திய ஜீவன் உண்டு என்று *அறியக்கூடும்*" (வலியுறுத்துதல் என்னுடையது) என எழுதினார். "உண்மையாகவா? உங்களுக்கு நிச்சயமாக தெரியுமா?" என நாம் பதில் அளிக்கக்கூடியவர்களாக இருக்கலாம்.

## தீர்வு

நிச்சயமற்ற நிலை என்ற அப்போதைய பிரச்சனைக்கு தீர்வு என்னவாக இருந்தது? அதே தீர்வானது இன்று நமது பிரச்சனைகளை தீர்த்துவிடும்.

***நீங்கள் அறியமுடியும்***

*அப்போதிருந்த தீர்வு.* நிச்சயமற்ற தன்மை என்பதற்கான யோவானுடைய தீர்வு அவருடைய வாசகர்கள் சில காரியங்களை அறிந்து கொண்டிருக்க முடிந்தது - அவைகளை யூகிக்கிறவர்களாக அல்ல அல்லது அவைகள் அப்படி இருந்தால் பரவாயில்லை என விரும்புகிறவர்களாக அல்ல, ஆனால் உண்மையிலேயே அவைகள் சாத்தியமாயிருந்தது என்பதை *அறிந்திருந்தார்கள்*, அப்படிப்பட்ட விசுவாசத்திற்குரிய நிச்சயமான காரியங்களில், பின் வருபவைகளை நாமும் அறிந்து கொள்ள முடியும்:

- 2:3-அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம். (காண்க 2:13, 14; 4:7, 8.)
- 2:5-நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்.
- 2:21; 4:2, 6-நாம் சத்தியத்தை அறிய முடியும் மற்றும் தவறிலிருந்து சத்தியத்தை வேறுபடுத்தி பார்க்க முடியும்.
- 3:1-நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம்.[3]
- 3:2-அவர் வெளிப்படும் போது நாம் "அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்."
- 3:5-"அவர் நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று" அறிந்திருக்கிறோம்.
- 3:14-நாம் "மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று" அறிந்திருக்கிறோம்.
- 3:16-''அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்தார்'' என்று அறிந்திருக்கிறோம்.
- 3:24-ஆவி நமக்கு தந்தருளப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். (காணவும் 4:13.)
- 4:13-நாம் தேவனில் நிலைத்திருந்து, பிதாவினிடத்தில் ஐக்கியமாக இருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம். (காண்க 5:19.)
- 4:16-''தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை'' அறிந்திருக்கிறோம், அதாவது தேவன் நம்மில் அன்பாயிருக்கிறார்!
- 5:13-நமக்கு நித்திய ஜீவன் உண்டென்று நாம் அறிந்திருக்கிறோம்.
- 5:14, 15-தேவன் நம்முடைய ஜெபங்களுக்கு செவிகொடுக்கிறார் என்று நாம் அறிந்திருக்கிறோம்.
- 5:20-"நாம் சத்தியமுள்ளவரை அறிந்து கொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறார்" என்றும் அறிவோம்.

யோவான், கள்ளப்போதகர்கள் - ''ஏமாற்றுக்காரர்களான அந்திகிறிஸ்துக்கள்'' தன்னுடைய வாசகர்களுக்கு எந்த ஒரு புதிய அறிவையும் கூடுதலாக வழங்கஇயலாதவர்களாக இருந்தார்கள் என்பதை வலியுறுத்தினார். இந்த சகோதரர்கள் முன்னதாக சத்தியத்தை அறிந்திருக்கிறார்கள் - ''ஒருவரும் (அவர்களுக்கு) போதிக்க வேண்டிய அவசியத்தில் அவர்கள் இருக்கவில்லை'' (1 யோவான் 2:20, 27). ஆகவே, ஆரம்பகால

அறிவுவாதிகள் அல்ல, யோவான் யாருக்கு எழுதினாரோ அந்த கிறிஸ்தவர்களே "அறிந்திருந்தவர்களாக" இருந்தார்கள். அவர்கள் அதிகமாக அறிந்திருக்கிறோம் என பாசாங்கு செய்தவர்களை விட அதிகமாக அறிந்திருந்தார்கள்! அவர்கள் சத்தியத்தை அறிந்திருந்தார்கள்; ஆகவே அவர்கள் கள்ளப் போதகர்களை நோக்கி, "நாங்கள் எதை விசுவாசிக்கிறோம் என அறிந்திருக்கிறோம் மற்றும் இது சத்தியமாயிருக்கிறது என்பதையும் அறிந்திருக்கிறோம் - ஆகவே நாங்கள் உங்களுக்கு செவி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் போகலாம்!" என சொன்னார்கள் மற்றும் சொல்லக்கூடியவர்களாக இருந்தார்கள்.

நாம் யோவானுடைய வாசகர்கள் சந்தித்த அதே பிரச்சனையை சந்திக்கிறவர்களாக இருக்கமாட்டோம். இயேசுகிறிஸ்து உண்மையிலேயே மாம்சத்தில் வந்தார் என்பதை சந்தேகிக்கிற ஒருவரும் நம்முடைய ஆராதனைகளில் பேசக்கூடியவராக இருக்கமாட்டார். இருப்பினும், யோவானுடைய வாசகர்களுக்கு தேவையாயிருந்த அதே கடிந்து கொள்ளுதல் நமக்கும் தேவையாயிருக்கிறது. சில நேரங்களில் ஒரு புதிய வெளிப்பாட்டை பெற்றிருப்பதாக கூறிகொள்ளும், இதுவரை ஒருவரும் கண்டுபிடித்திராத ஆழமான சத்தியங்களை கற்றுக் கொண்டிருப்பதாக கூறிக் கொள்ளும் பிரசங்கியார்கள் வந்து கொண்டு தான் இருக்கிறார்கள். அப்படி நடந்தால், அது நடக்கும் போது, நாம் முன்னதாக அறிந்திருப்பதை நினைவுபடுத்திகொள்ள வேண்டும்! தேவனுடைய வசனத்தில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்கள் தொடர்ந்து சத்தியமாகவே நிலைத்திருக்கிறது! ஒவ்வொரு பிரசங்கியாரும் போதிப்பது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தின்படி இருக்கிறதா அல்லது இல்லையா என்று அவர்களை நாம் சோதித்து அறிவோமாக - சிறப்பு அறிவு தங்களுக்கு இருக்கிறது என்று கூறிக் கொள்ளும் போதகர்களால் அந்த சத்தியத்தை விட்டு நாம் விலகாதிருப்போமாக.

*இப்போதைக்கான தீர்வு.* இன்று கிறிஸ்தவர்களுக்கு அதிக பிரச்சனையை ஏற்படுத்த சாத்தியமான அறிவு என்பது 1 யோவான் 5:13ல் யோவான் குறிப்பிட்டிருக்கிற அறிவாக இருக்கிறது, "உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்." நமக்கு நித்திய ஜீவன் உண்டென்பதை நாம் உண்மையிலேயே அறிந்து கொள்ள முடியுமா?

ஒருவன் விசுவாசத்திலிருந்து வழுவிப்போவது சாத்தியமல்ல என்பதை நம்புகிறவர்களால் இந்த வசனப் பகுதி தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது. யோவான் நாம் - நிகழ்காலத்தில் - நித்திய ஜீவனை உடையவர்களாயிருப்பதாக பேசினதாக அவர்கள் கூறுகின்றனர். நாம் அந்த ஜீவனை உடையவர்களாயிருந்து அது நித்திய ஜீவனாயிருக்கும் பட்சத்தில், அதை நாம் எப்படி இழக்கக் கூடும்? என அவர்கள் கேட்கிறார்கள்.

சிலர் இந்த வசனப்பகுதியின் செய்தியை மறுக்கும் நிலையில் பதில் செய்கிறார்கள். நாம் நிகழ்காலத்தில் நித்திய ஜீவனை உடையவர்களாக இருக்கிறோமா என்பதை நாம் உண்மையிலேயே அறிய முடியாது என அவர்கள் கூறுகின்றனர். அந்த கருத்தின்படி, நாம் இரட்சிப்பை இழந்து போவது சாத்தியமானதால், நமது பரலோக வீடு எப்போதும் ஆபத்திலிருக்கிறது மற்றும்

*"நல்லது உத்தமமும் உண்மையுள்ள ஊழியக்காரனே" என்ற நற்செய்தியை கேள்விப்படும்போது மட்டுமே பரலோகத்தில் நமக்கு ஒரு இடம் உண்டு என்பதை நாம் அறியமுடியும். இந்த மக்களுக்கு, நமது நித்திய வாழ்விடத்தைக் குறித்த நிச்சயமற்றதன்மை என்பது வாழ்க்கையின் ஒரு உண்மையாயிருக்கிறது. இந்த நிச்சயமற்ற தன்மையை கிறிஸ்தவர்கள் உண்மையாயிருப்பதற்கான ஒரு ஊக்குவிப்புக்கு உதவியாக அவர்கள் பார்க்கிறார்கள், ஏனெனில் நாம் பாவம் செய்தால், அதற்காக மனந்திரும்பி, நமது பாவங்களை அறிக்கையிடாதவரையில் நாம் நரகத்தை நோக்கி செல்கிறவர்களாயிருக்கிறோம் என்பதை அறிவோம். இந்த இரண்டு விளக்கங்களுமே சரியானவைகள் அல்ல.*

*ஒருபுறம் நாம் நமது இரட்சிப்பை இழந்துவிடமுடியும்; அதினால் நாம் நித்திய ஜீவனை இழந்து விடமுடியும் என புதிய ஏற்பாடு போதிக்கிறது. இந்த வசனப் பகுதியில் பேசப்பட்டுள்ள "நித்தியஜீவன்" என்பது கிறிஸ்துவுடன் தொடர்புடைய ஒரு வாழ்க்கை தரமாக இருக்கிறது, நாம் உயிரோடு இருக்கும் போது அதை அவரோடு பகிர்ந்து கொள்கிறோம், நாம் இந்த வாழ்விலிருந்து கடந்து செல்லும் போது, அது ஒரு முடிவில்லாத வாழ்வாக மாறுகிறது.[4] நாம் கிறிஸ்துவை விட்டு விலகிப்போனால், அந்த நித்தியஜீவன்மேல் நமக்குள்ள கட்டுபாட்டை இழக்கிறோம் மற்றும் அதை நித்தியத்திற்கும் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கையை நாம் இழந்து விடுகிறோம்.*

*இதற்கு மறுபுறம், கிறிஸ்தவர்கள் என்ற முறையில், நாம் கிறிஸ்துவோடு ஒரு விதமாக வாழ்வை பெற்றிருக்கிறோம் என்ற நிச்சயத்தை உடையவர்களாயிருப்பது அவசியமானதாக இருக்கிறது, அதாவது மற்றவர்கள் வாழும் வாழ்க்கையை விட, நாம் வாழும் வாழ்க்கை வித்தியாசமானதாக இருக்கிறது. மேலும், நாம் இந்த உலகத்திலிருந்து பிரிந்து சென்ற பிறகும், நாம் அந்த நித்திய ஜீவனை தொடர்ந்து அனுபவிக்கிறவர்களாக இருப்போம் என்ற நிச்சயத்தை உடையவர்களாயிருக்க முடியும் என்பதை நாம் உணரவேண்டும். நாம் இரவு நித்திரைக்கு செல்லும் போது, தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா அல்லது இல்லையா என்ற கேள்வியோடு செல்ல வேண்டியதில்லை. நாம் காலையில் எழுந்திருக்கும்போது இன்று மரித்தால் நாம் பரலோகம் போவோமா அல்லது இல்லையா என்ற கேள்வியோடு எழுந்திருக்க வேண்டியதில்லை. நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், நாம் தொடர்ந்து இரட்சிக்கப்பட்டு வருகிறோம் மற்றும் நாம் இரட்சிக்கப்படுவோம் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்! 1 யோவான் 5:13 இன் சத்தியம் நமது மனங்களில் பதிக்கப்படவேண்டும்: "உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும் தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்." நமக்கு நித்திய ஜீவன் உண்டென்று நாம் அறிந்திருக்கமுடியும்!*

***யார் அறிய முடியும்?***

*இருப்பினும், கூடுதலான விஷயங்கள் சொல்லப்பட வேண்டும் "உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும் ..." என நாம் வாசித்திருக்கிறோம். இந்த வாக்கியத்திலுள்ள "உங்களுக்கு, நீங்கள்" என்பது யார்? அவர் அல்லது அவளுக்கு நித்திய ஜீவன் இருக்கிறது என்பது யாருக்கு தெரியும்? பெரும்*

அளவில், இந்த கேள்வியைப்பற்றிதான் 1 யோவான் புத்தகம் இருக்கிறது. யோவான் தன்னுடைய வாசகர்கள் கிறிஸ்துவுக்குள் கொண்டிருந்த சகல ஆசீர்வாதங்களையும் அறிந்திருக்க விரும்பினார், மேலும் அவர்கள் அதின்படி வாழவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். இந்த நிருபத்தின் ஐந்தாம் அதிகாரத்தில், யோவான் நித்திய ஜீவனைப்பற்றி நிச்சயமுடையவர்களை அடையாளப்படுத்தியுள்ளார். 1 யோவான் 5ஆம் அதிகாரத்தை வாசியுங்கள்.

இந்த வசனங்களின் ஒரு பகுதி (வசனங்கள் 6-11) இயேசுவின் தெய்வீகத் தன்மைக்குறிய சாட்சிகளை யோவானுடைய வாசகர்களுக்கு நினைவுபடுத்துவதற்கு எழுதப்பட்டது. அதின் இன்னொரு பகுதி (வசனங்கள் 14-17) நமது ஜெபங்கள் கேட்கப்படும் என்ற வாக்குத்தத்தத்தை கொடுக்கிறது. இறுதியான சில வசனங்கள் (வசனங்கள் 18-21) இந்த நிருபத்திற்கான ஒரு சுருக்கமான குறிப்பு போன்று காணப்படுகிறது.[5] எப்படியிருப்பினும், முழு அதிகாரத்திலும் யார் நித்திய ஜீவனுக்கான உறுதியை பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிகிறவர்களாயிருக்கிறோம்.

*(1) "தேவனால் பிறந்தவர்கள்" யாரோ, அவர்கள் நித்திய ஜீவனுக்கான உறுதியை பெற்றிருக்கிறார்கள்* (5:1, 4). 1 யோவான் கிறிஸ்தவர்களுக்கு - கிறிஸ்தவர்களாக மாறினவர்களுக்கு மற்றும் மறுபடியும் பிறந்தவர்களுக்கு எழுதப்பட்டது. கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் மற்றும் மறுபடியும் பிறந்திருக்காதவர்கள் ஆகியோர் நித்திய ஜீவனுக்கான உறுதியை உடையவர்களாக இருப்பதில்லை.

*(2) இயேசுவானவரே கிறிஸ்து என்றும்* (1 யோவான் 5:1), *தேவனுடைய குமாரன்* (1 யோவான் 5:5, 9, 10, 11, 12, 13,[6] 20)[7]. *என்றும் விசுவாசிக்கிறவர்கள் யாரோ அவர்கள் நித்திய ஜீவனுக்கான உறுதியை உடையவர்களாயிருக்கிறார்கள்.* யோவானுடைய நாட்களில் வாழ்ந்தவர்களில், கள்ளப்போதகர்களின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டவர்கள் நித்திய ஜீவனை பெற்றிருந்திருக்கமாட்டார்கள் என்ற உபதேசத்தை இது அர்த்தப்படுகிறது. இன்று இயேசுவை நிராகரிக்கிறவர்கள் மற்றும் அவரில் விசுவாசம் கொள்ளாதவர்கள் ஆகியோர் நித்திய ஜீவனுக்கான உறுதியை உடையவர்களாக இருப்பதில்லை.

*(3) தேவனில் அன்புகூருகிறவர்கள் யாரோ, அவர்கள் நித்திய ஜீவனுக்கான உறுதியை உடையவர்களாயிருக்கிறார்கள்* (5:2, 3). கிறிஸ்தவர்கள் தேவனில் அன்புகூர வேண்டும், தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூரவேண்டும் மற்றும் தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும். தேவனிடத்தில் அன்புகூராதவர்கள் யாரோ அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியமாட்டார்கள், தேவனுடைய பிள்ளைகளை நேசிக்கவும் மாட்டார்கள்; ஆகவே, அவர்களுக்கு நித்திய ஜீவன் உறுதி செய்யப்படவில்லை.

*(4) தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறவர்கள் யாரோ, அவர்கள் நித்திய ஜீவனுக்கான உறுதியை உடையவர்களாயிருக்கிறார்கள்* (5:1). நாம் காண்கிற தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூராமலிருப்போமானால், காணாத தேவனிடத்தில் அன்புகூருகிறோம் என கூற இயலாது (1 யோவான் 4:20). உண்மையில், யோவான் நாம் சகோதரரிடத்தில் "கிரியையினாலும் உண்மையினாலும்" அன்புகூர்ந்தால், நாம் நம்மை "சத்தியத்திற்குரியவர்கள்" என்று அறிந்து கொண்டு, நம்முடைய இருதயங்களை நிச்சயப்படுத்திக்கொள்ளலாம் என்று சொன்னார் (1 யோவான் 3:18, 19). இருப்பினும் "நம்முடைய

இருதயம் நம்மை எந்த காரியங்களில் குற்றவாளிகளாக தீர்த்தாலும்" - நாம் சோர்வடைந்து நமது இரட்சிப்பை குறித்து சந்தேகப்பட்டாலும் - "தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்" (1 யோவான் 3:20). சோகமான மற்றும் நிராகரிப்பின் உணர்வுகள் நாம் நித்திய ஜீவனுக்கான நம்முடைய உறுதியை இழந்துவிட்டோம் என்பதை நிரூபிப்பதில்லை. அவருடைய சித்தத்தை செய்வதற்கு நாம் சிறப்பாக செயல்பட்டால், நாம் சந்தேகப்படும் நிலையில் கூட நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை தேவன் அறிந்திருக்கிறார்!

*(5) தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்கிறவர்கள் யாரோ, அவர்கள் நித்திய ஜீவனுக்கான உறுதியை உடையவர்களாக இருக்கிறார்கள்* (1 யோவான் 5:2, 3). நாம் தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ள மறுக்கும் அதேவேளையில், அவரில் அன்புகூருவதாக உரிமை கோர முடியாது (காணவும் யோவான் 14:15). "அவருடைய கற்பனைகள் பாரமானவைகளும் அல்ல" என்ற ஆறுதலான கருத்தையும் யோவான் கூட்டி வழங்கியுள்ளார் (1 யோவான் 5:3ஆ). நமக்கு தீமையாயிருக்கிற எதையும் நாம் செய்யும்படி தேவன் நம்மிடத்தில் கேட்பதில்லை, நமக்கு செய்ய மிகவும் கடினமானவைகளையும் செய்யும்படி அவர் நம்மிடத்தில் கேட்பதில்லை. நாம் நம்மை முற்றிலுமாக அவருக்கு ஒப்புக் கொடுத்தால், "அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" என்பதை நாம் அறிந்து கொள்வோம். பதிலாக, நமது வாழ்வுக்கான அவருடைய சித்தம் நமக்கு மகிழ்சியாகவே இருக்கிறது.

நாம் எந்த கட்டளைகளை கைக்கொள்ள வேண்டும்? நாம் "விசுவாசத்தினாலே மாத்திரம்" இரட்சிக்கப்படுவதில்லை; மாறாக, விசுவாசம் நம்மை தேவசித்தத்தை செய்ய வழிநடத்துகிறபடியால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். ஆகவே நாம் நமக்கு பொருந்துகிற ஒவ்வொரு கட்டளைக்கும் கீழ்ப்படிய நாம் சிறப்பாக செயல்படுவோம்.

*(6) தொடர்ந்து பாவம் செய்யாதிருக்கிறவர்கள் யாரோ, அவர்கள் நித்திய ஜீவனுக்கான நிச்சயத்தை உடையவர்களாயிருக்கிறார்கள்* (5:18). கிறிஸ்தவர்கள் பாவம் செய்வதில்லை என யோவான் கூறவில்லை (1 யோவான் 1:7-10), ஆனால் அவர் கிறிஸ்தவர்கள் பழக்கதோசமாக பாவம் செய்வதில்லை; தேவனிடத்தில் அன்புகூருகிறவர்கள் தொடர்ந்து பாவம் செய்து கொண்டிருப்பதில்லை என்றே கூறினார். உண்மையுள்ள கிறிஸ்தவருடைய வாழ்க்கை நீதியினால் நிறைந்திருக்கிறது. அவர் அல்லது அவள் எப்போதாவது இடறலாம், ஆனால் அவர்கள் பாவத்திலேயே வாழ்வதை ஒரு பழக்கமாக வழக்கமான செயலாக கொண்டிருக்கமாட்டார்கள். அதின் பொருள் என்னவென்றால், வெளிப்டையாக மற்றும் முரட்டாட்டமாக பாவத்தில் வாழ்கிற ஒரு கிறிஸ்தவன் 1 யோவான் 5:13 இல் இருந்து எந்த ஆறுதலையும் பெறமாட்டான்; நித்திய ஜீவனுக்கான நிச்சயத்தையுடையவர்கள் மத்தியில் அவன் இருப்பதில்லை.

*(7) யாருடைய ஜெபங்கள் கேட்கப்படுகிறதோ, அவர்கள் நித்திய ஜீவனுக்கான நிச்சயத்தை உடையவர்களாக இருக்கிறார்கள்.* முன்பு பட்டியலிடப்பட்ட குணாதிசயங்களிலிருந்து இந்த உண்மை மாறுபட்டதாயிருக்கிறது, இருப்பினும் யோவான் இதை 1 யோவான் 5ஆம் அதிகாரத்தில் சேர்க்க தகுதியானதாக கண்டார். அவர் இதை உறுதிப்படுத்துவது மறுபடியும் நிச்சயப்படுத்துவதாக உள்ளது:

> நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக்கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம் (1 யோவான் 5:14, 15).

தேவன் நம்முடைய ஜெபங்களை கேட்டு பதிலளிக்கிறார் என்பதை நாம் நம்ப வேண்டியது அவசியமாயிருக்கிறது.[8] அதே நேரத்தில், "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால்" மட்டும் தேவன் நமக்கு செவிகொடுக்கிறார் என்பதை நாம் மனதில் வைக்கவேண்டும். நாம் எப்போதும், இயேசு ஜெபித்தது போல, "உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று ஜெபிக்கவேண்டும் (மத்தேயு 26:42; காண்க 6:10).

ஜெபங்களுக்கு பதிலளிக்கப்படுவது தொடர்பான வாக்குத்தத்தத்தில், யோவான் பாவம் செய்கிறவர்களுக்காக ஜெபிப்பது குறித்து பேசியுள்ளார். பாவம் செய்யும் நம்முடைய சகோதரர்களுக்காக நாம் ஏறெடுக்கும் ஜெபங்கள் பலனுள்ளது என்ற நிச்சயம் நமக்கு உள்ளது (1 யோவான் 5:16அ). வேறு ஒரு இடத்தில், கிறிஸ்தவர்கள், "உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்" என்ற அறிவுரையை பெற்றுள்ளனர் (யாக்கோபு 5:16).

இருப்பினும், "மரணத்துக்கு ஏதுவான பாவம்" - செய்தவர்களுக்காக- அதாவது ஒரு சகோதரர் அல்லது ஒரு சகோதரி இருதய கடினத்தினிமித்தம் மனந்திரும்பாமலிருக்கிற பாவத்திற்காக நாம் ஜெபிக்க வேண்டிய அவசியம் இல்லை என யோவான் கூறியுள்ளார். அப்படிப்பட்டவர்களுக்காக நாம் ஜெபிக்கக்கூடாது என அவர் நமக்கு கட்டளையிடவில்லை; அப்படிப்பட்ட ஜெபத்தால் எந்த நன்மையும் ஏற்படாது என்பதை சுட்டிக் காட்டினார்.

*(8) விக்கிரகங்களுக்கு விலகி இருக்கிறவர்கள் யாரோ அவர்கள் நித்திய ஜீவனுக்கான நிச்சயத்தை உடையவர்களாக இருக்கிறார்கள்.* 1 யோவானின் கடைசி வசனம் (யோவான் முன்னதாக விக்கிரகங்களைபற்றி நிருபத்தில் எதுவும் சொல்லியிராத நிலையில் இது சந்தர்ப்ப பொருள் இன்றி இருப்பதாக தோன்றுகிறது[9]) வாசகர்களை விக்கிரகங்களுக்கு எதிராக எச்சரிக்கிறது: "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களை காத்துக்கொள்வீர்களாக" (1 யோவான் 5:21). யோவான் "மெய்யான தேவனை"பற்றி பேசிக் கொண்டிருந்தபடியால், விக்கிரகவழிபாட்டின் பாடத்தை பற்றி குறிப்பிட்டார்,

> அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் (1 யோவான் 5:20).

இயேசுவைப் பற்றி தவறான போதனையை ஏற்றுக்கொள்வதற்கு எதிராக யோவான் எச்சரித்திருந்தார், விக்கிரக வணக்கத்தோடு பிரிவினை வாதிகள்

இயேசுவை சமமாக்கிக் கொண்டிருந்த கண்ணோட்டத்தை பற்றி இங்கே குறிப்பிட்டுக் கொண்டிருந்தார்.[10] விக்கிரக வழிபாடு என்பது - ஜீவனுள்ள மெய்யான தேவனை நிராகரிப்பதாயுள்ளது - ஆகவே அது கடுமையான பாவமாக இருக்கிறது. ஆகவே யோவான் இதற்கு எதிரான ஒரு எச்சரிக்கையோடு நிருபத்தை நிறைவு செய்கிறார்.

விக்கிரக வழிபாட்டிற்கு எதிரான ஒரு எச்சரிக்கை நமக்கு பொருந்துவதாயிருக்கிறது. நாம் விக்கிரக வழிபாடு விஷயத்தில் குற்றவாளிகளாக இருக்கக்கூடும். நாம் இயேசுவை குறித்து குறைத்து மதிப்பிட்டவர்களாய், தேவனுக்குரிய துதியை அவருக்கு கொடுக்க தவறுவோமானால், அப்போது நாம் விக்கிரக வழிபாட்டிற்குரிய குற்றவாளிகளாக மாறுகிறோம், நாம் ஏதொன்றையாகிலும் தேவனுக்கு முன்பாக வைப்போமானால், அதை நாம் ஒரு விக்கிரகமாக மாற்றுகிறோம்; மறுபடியும் அது நம்மை விக்கிரக வழிபாடு செய்த குற்றவாளிகளாக மாற்றுகிறது, ஒரு நபர், நடப்பதை உணராமலேயே தன் குடும்பத்தை தேவனுக்கு முன்பாக வைக்கலாம். தனது வணிகம் அல்லது வேலையை தேவனுக்கு முன்பாக வைக்கலாம். அல்லது தனது பொழுதுபோக்கை அல்லது தனது ஒய்வு நேரத்தை தேவனுக்கு முன்பாக வைக்கலாம். ஒருவர் வெற்றியை, சிற்றின்பத்தை, பணத்தை அல்லது கல்வியை[11] ஆராதிக்கக் கூடியவராக இருக்கலாம். சாத்தானையும் பாவத்தையும் ஆராதிக்கவும், தன் வாழ்வைப் பாவத்தில் கழிக்கவும் அவன் தேவனைக்கூட புறக்கணிக்கக்கூடும். நித்திய ஜீவனுக்கான நிச்சயத்தை பெற்றுள்ளவர்கள் விக்கிரக வழிபாடு செய்கிறவர்களின் மத்தியில் இருப்பது *இல்லை* என்பதை நாம் உணரவேண்டும்.

## முடிவுரை

முன்னதாக, காரியங்களை அறியாமலிருப்பது எவ்வளவு வேதனையானது என கவனித்தோம். தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக - 1 யோவான் நிருபத்தின்படி - கிறிஸ்தவர்களுக்கு அந்த பிரச்சனை இருப்பதில்லை. நாம் நித்திய ஜீவனை உடையவர்களாக இருக்கிறோம் மற்றும் நித்திய காலமாக நித்திய ஜீவனை அனுபவிப்போம் என்ற சத்தியம் உட்பட இன்னும் நாம் அதிகமானவைகளை தெரிந்து கொள்ளலாம்!

இருப்பினும், நாம் நித்திய ஜீவனுக்கான நிச்சயத்தை பெற்றவர்களின் மத்தியில் இருப்பதை தெரிந்தெடுக்க வேண்டும். கொலம்பிய மாகாணம், வாஷிங்டனில் சமீபத்தில் நடைபெற்ற ஊழலை குறிப்பிட்டு ஒரு நாளிதழ் தன் தலைப்பு செய்தியில் “யாருக்கு என்ன எப்போது நடந்தது என்று தெரியும்?” என்ற ஒரு கேள்வியை கேட்டிருந்தது, அந்த கட்டுரையின் கருத்து, சட்டம் இயற்றுகிறவர்கள் தாங்கள் அறிந்திருந்த தங்கள் கூட்டாளிகளின் தவறான நடவடிக்கைகளைப் பற்றி பேசியிருக்க வேண்டும்; அவர்கள் அப்படி எதுவும் பேசாமலிருந்ததால் தங்கள் கூட்டாளிகளின் தவறுகளின் குற்றத்தில் அவர்களும் பங்கு பெற்றார்கள் என்பதை அந்த செய்திதாள் உணர்த்தியது.

‘‘யாருக்கு என்ன எப்போது நடந்தது என்று தெரியுமா?’’ என்பது நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை தொடர்பாக கேட்பதற்கு ஒரு நல்ல கேள்வியாக இருக்கிறது. யோவானுடைய நாட்களில், யார் தான் நித்திய ஜீவனை உடையவராக இருந்தோம் என்பதை அறிந்திருந்தார் மற்றும் அதை அவரால்

*எப்போது அறிய முடிந்தது?*

*இதை புரிந்து கொள்ளுங்கள்: உண்மையுள்ள தேவனுடைய பிள்ளை மட்டும் தனக்கு நித்திய ஜீவன் இருக்கிறது என்பதை அறிந்திருக்கிறார்! ஒருவர் கிறிஸ்துவை விசுவாசித்து, தன் பாவங்களுக்காக மனந்திரும்பி, தன் விசுவாசத்தை அறிக்கையிட்டு மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, கிறிஸ்தவராக மாறியபின் மட்டுமே இப்படிப்பட்ட நிச்சயத்தை உடையவராக இருக்கமுடியும், இந்த காரியங்களை நீங்கள் செய்யாதிருந்தால், உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்பதை நீங்கள் அறியாதிருப்பீர்கள்! உண்மையில், அது உங்களுக்கு இல்லை என்பதை நீங்கள் அறிய முடியும்!*

*கூடுதலாக, ஒரு கிறிஸ்தவர் தன்னால் இயன்ற மட்டும் சிறப்பாக செயல்படுவதன் மூலம் மற்றும் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வதில் ஜாக்கிரதையாக பிரயாசப்படுவதின் மூலம் இந்த அறிவை அவர் தொடர்ந்து கொண்டிருக்க முடியும். இதை நீங்கள் செய்யாமல் இருந்தால், உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்பதை நீங்கள் அறிய முடியாது. உண்மையில், உங்களுக்கு நித்திய ஜீவனுக்கான உறுதி இல்லை என்பதை குறித்து நீங்கள் நிச்சயமுள்ளவர்களாக இருக்கலாம்!*

*“யாருக்கு என்ன எப்போது நடந்தது என்று தெரியும்?” நீங்கள் கிறிஸ்தவராக மாறின போது, நீங்கள் நித்திய ஜீவனை உடையவர்களாக இருந்தீர்கள் என்பதை அறிந்திருந்தீர்கள்! நீங்கள் இன்னமும் அதை அறிந்திருக்கிறீர்களா அல்லது முரட்டாட்டம், அலட்சியம் மற்றும் அஜாக்கிரதையால் அதை இழந்து விட்டீர்களா? நீங்கள் உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புவீர்களானால் (நடபடிகள் 8:22), உங்கள் பாவங்களை அறிக்கையிடுவீர்களானால் (1 யோவான் 1:9), மற்றும் பாவ மன்னிப்புக்காக ஜெபிப்பீர்களானால் (காண்க லூக்கா 11:4அ; 1 யோவான் 5:16). அந்த நிச்சயத்தை நீங்கள் மறுபடியும் பெற்றுக் கொள்ள முடியும்.*

---

குறிப்புகள்

*[1]யோவானுக்கு ‘‘நித்திய ஜீவனில்’’ இருந்த ஆர்வம் புத்தகம் முழுவதும் வெளிப்படையாக தெரிகிறது. யோவான் இயேசுவை “நித்திய ஜீவனுக்கு” சமமாக்கினார் (1:2), மற்றும் அவர், “தேவனுடைய சித்தத்தின்படி - செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்” என்றார் (2:17). மேலும் அவர் நமக்கான தேவனுடைய வாக்குத்தத்தம் “நித்திய ஜீவனை’’ பற்றியதாக இருக்கிறது என்பதை அறிவித்தார் (2:25) மற்றும் அவர் “மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது” என்று எச்சரித்தார் (3:15). மேலும் அவர், “தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்தி ருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது” என அறிவித்தார் (5:11). இறுதியாக, அவர் “அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை,” “இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்” என குறிப்பிட்டு பேசினார் (5:20). [2]காணவும் கலாத்தியர் 5:4; எபிரெயர் 6:4-6; 1 கொரிந்தியர் 10:12; யாக்கோபு 5:19, 20. [3]நாம் உண்மையுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்போது மட்டுமே தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் நாம் ஆறுதலடைவதை உரிமை கோரமுடியும் என்பதை யோவான் தெளிவுபடுத்தியுள்ளார். (காண்க 2:29; 3:6; 3:15; 3:19; 5:2; 5:18.) [4]J. W. ராபர்ட்ஸ் என்பவர், “யோவான் விசுவாசியின் வாழ்க்கையை குறிப்பிடுவதற்கு பயன்படுத்தியுள்ள “நித்திய*

*ஜீவன்" என்பது கால அளவை (நித்தியமான) சார்ந்தது அல்ல, தர அளவை சார்ந்ததாக விளக்கப்பட வேண்டியிருந்தது என கூறினார். ஒரு விசுவாசிக்கு தேவனுடைய தெய்வீக சுபாவத்திற்கு தொடர்புடைய தெய்வீகமான புதிதான ஜீவன் கொடுக்கப்பட்டுள்ளது (2 பேதுரு 1:4)"* (J. W. Roberts, *The Letters of John,* The Living Word Commentary [Austin, Tex.: R. B. Sweet Co., 1968], 27). *இதற்கு வித்தியாசமாக, டப் மெக்லிஸ் என்பவர் கிறிஸ்தவர்கள் நித்திய ஜீவனை நிகழ்காலத்தில் பெற்றிருப்பதில்லை, மாறாக நித்திய ஜீவனுக்கான வாக்குத்தத்தத்தை உடையவர்களாயிருக்கிறார்கள் என வாதிட்டார்.* (Dub McClish, "Eternal Life Is in the Son," *Denton Lectures* [1987], 246-47.) [5]*1 யோவான் 1:1-4 இந்த புத்தகத்தின் "முகவுரை" என்று கருதப்படுமானால், 1 யோவான் 5:18-21 முடிவுரையாக கருதப்படலாம். கிறிஸ்தவர்கள் (1) தேவனுடைய பிள்ளைகள் தொடர்ந்து பாவம் செய்வதில்லை (வசனம் 18), (2) அவர்கள் தேவனோடு ஐக்கியம் உடையவர்களாக இருக்கிறார்கள் ("தேவனால் உண்டாயிருக்கிறார்கள்"; வசனம் 19), (3) இயேசு தேவனுடைய குமாரனாயிருக்கிறார் என்பவைகளை கிறிஸ்தவர்கள் அறியமுடியும் என கூறுவதால் இந்த முழு நிருபத்திற்கு ஒரு சுருக்கமான குறிப்பாக (வசனம் 20) விளங்குகிறது.* [6]*வசனம் 13 இல் யோவான் "அவருடைய நிருபத்தின் நோக்கத்தை, அதாவது அவருடைய வாசகர்களுக்கு அவர்கள் எதை பெற்றிருக்கிறார்களோ அதின் நிச்சயத்தை உறுதிப்படுத்துகிறார்"* (W. E. Vine, *The Epistles of John: Light, Love, Life* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1970], 102). *இந்த நோக்கத்தை யோவானுடைய சுவிசேஷத்தின் நோக்கத்தோடு ஒப்பிடுங்கள் (யோவான் 20:30, 31). அவர் சுவிசேஷத்தை அவருடைய வாசகர்கள் விசுவாசித்து, நித்திய ஜீவனை பெறும்படி எழுதினார்; அவர் இந்த நிருபத்தை அவர்கள் நித்திய ஜீவனை உடையவர்களாயிருக்கிறார்கள் என்பதை அறியும்படி எழுதினார்.* [7]*"விசுவாசிக்கிறவன் எவனும்" என்பது நிகழ்கால எச்சத்தின் மொழிபெயர்ப்பாகவுள்ளது; "நிகழ்காலம் ... விசுவாசம் தொடர்ந்து இருக்கவேண்டியது என்று உணர்த்துகிறது"* (Stephen S. Smalley, *1, 2, 3 John,* Word Biblical Commentary [Waco, Tex.: Word Books, 1984], 266). [8]*மத்தேயு 7:7-11ஐ ஒப்பிடுக.* [9]*இந்த புத்தகத்தின் கடைசி வசனத்தில் விக்கிரக வழிபாடு முதன் முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது ஆச்சரியமாக இருக்கிறது, ஏனெனில் இந்த நிருபம் பொதுவாக ஒரே விதமான கருத்துக்களை திரும்ப திரும்ப கூறுவதாக அமைந்துள்ளது. இது விநோதமாகவும் - யோவானுடைய பாணிக்கு மாறுபட்டும் இருக்கிறது, அவர் விக்கிரக வழிபாடு என்ற பாடத்தை பற்றி அக்கறையுள்ளவராக இருந்திருந்தால், அதை அவர் நிருபத்தின் கடைசி வாக்கியம் வரை குறிப்பிடவில்லை.* [10]*வேறு விளக்கங்கள் சாத்தியமானவைகளாக இருக்கின்றன, மோரிஸ் வோமெக் என்பவர் மற்ற விளக்கவுரையாளர்கள் கூறியுள்ள மூன்று விளக்கங்களோடு இதையும் இணைத்துள்ளார்: "முதலாவதாக சிலர் யோவான் தெளிவானவராக இருக்கிறபடியால்; நாம் விக்கிரகங்களுக்கு விலக்கி நம்மை காத்துக்கொள்ளவேண்டும் என்ற அர்த்தத்தில் இயல்பாக கூறியுள்ளார் ... இரண்டாவதாக, யோவான் தனது நாளில் கள்ளப்போதகர்கள் உருவாக்கியிருந்த உண்மையல்லாத சிலைகளை குறிப்பிடுகிறார் ... மூன்றாவதாக, யோவான் எபேசுவில் இருந்த மத சூழ்நிலையை குறிப்பிட்டார் என்ற ஆலோசனையை வேறு சிலர் முன் வைக்கின்றனர் ... நான்காவதாக, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் வரும் எதையும் யோவான் குறிப்பிட்டார் என சிலர் நம்பினார்கள்"* (Morris Womack, "Keep Yourself from Idols," *Truth for Today* 6 [November 1985]: 21-22). *பிரிவினைவாதிகள் இயேசுவைப் பற்றி கொண்டிருந்த அவர்களுடைய எண்ணப்போக்குகளை, யோவான் விக்கிரக வழிபாட்டிற்கு எதிராக எச்சரித்ததோடு சமப்படுத்தி பார்க்கிற விளக்கவுரையாளர்களின் மத்தியில் பின்வருவோர் உள்ளனர்*

Thomas F. Johnson, *1, 2, and 3 John,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1993), 141, and John R. W. Stott, *The Epistles of John,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Erdmans Publishing Co., 1960), 197.

[11]Womack, 22-23.